# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.26 (L.W.50)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.Vinoth Rajkumar | Caste | : SC, Adi Dravida |
| Father's Name | : R.Pandurangan | Calling | : Doctor |
| Village | : Chennai | Religion | : Hindu |
| Taluk | : Chennai | Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 29.01.2025.

(A2 to A5 present. A1 and A6 absent and their absence condoned on filing u/s 355 B.N.S.S petition)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 2.40 P.M.**

நான் தற்போது அரசு ராயப்பேட்டை மருத்துவமனை சென்னையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

சாட்சி ஷமீல் பாஷாவுக்கு அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்துள்ளார். சிகிச்சை அளித்ததற்கான அசல் ஆவணங்கள் தற்போது மருத்துவமனையில் உள்ளதால் அதை எடுத்துவர சாட்சி அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (நேரம் மாலை 03.07 மணி)

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடங்கிய நேரம் மாலை 05.17 மணி**

சாட்சி அரசு மருத்துவமனை அடுக்கம்பாறை, வேலூருக்கு சென்று வழக்கில் சம்பந்தப்பட்ட நோயாளி ஷமீல்பாஷாவின் அசல்

மருத்துவ ஆவணங்களை மேற்படி மருத்துவமனையின் முதல்வரிடம் கேட்டபோது Medico Legal Case inpatient and death cases அசல் ஆவணங்களை ஆறு ஆண்டுகள் முடித்தவுடன் கழித்துக்கொள்ளலாம் என்று அரசு துறை சார்ந்த கடிதம் உள்ளதாலும் அந்த ஆவணங்கள் கழிக்கப்பட்டன என்று சொல்லி அந்த அரசு கடிதமும் அதை தொடர்ந்து மேற்படி மருத்துவமனை முதல்வர் உத்தரவிட்டதின் செயல்முறைகளை என்னிடம் கொடுத்தார்கள்.

அதன் அடிப்படையில் அசல் மருத்துவ ஆவணங்கள் அழிக்கப்பட்டதாக தெரியவருகிறது. அது சம்பந்தமாக உரியமுறையில் மேற்படி மருத்துவமனை முதல்வர் கொடுப்பதாக சொல்லியுள்ளார் அதற்கு சிறிது காலமாகும்.

நான் கடந்த 22.06.2015 அன்று அரசு வேலூர் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக பணிபுரிந்தபோது 20 வயதுமிக்க ஷமீல்பாஷா என்ற நபரை அரசு ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

அவர் அன்றைய தினம் 22.06.2015 அன்று மதியம் 04.10 மணியளவில் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்கள் 19.06.2015 அன்று இரவு 08.00 மணியளவில் பள்ளிக்கொண்டாவில் தாக்கியதால் காயங்கள் ஏற்பட்டதாக தெரிவித்தார்.

அவரை நான் பரிசோதனை செய்தபோது அவர் முழு சுயநினைவோடு இருந்தார். அவருக்கு கீழக்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. வலது தோல்பட்டையில் தொடு காயமும்,

2. வலது கையில் வீக்கக்காயம் மற்றும் தொடு காயமும்,

3. கழுத்திலும் மேல் முதுகிலும் தொடு காயமும்,

4. வலது முழங்கையில் 4X2 செ.மீ. சராய்ப்பு காயமும்,

5. இடது தோல் பட்டையில் தொடு காயமும் காணப்பட்டது.

மேலும் அவரது இரு கைகளிலும் வலுவிழந்து காணப்பட்டார். வலது புறம் இடது புறத்தை விட மிகவும் வலு குறைவாக காணப்பட்டது. Grading of power 1/5 இடதுபுறம் 4/5 காணப்பட்டது. உணர்ச்சிகள் இரு கைகளிலும் சமமாக இருந்தது.

அவருக்கு இரு தோள்பட்டைகளிலும், கையிலும், கழுத்திலும் மேல் முதுகிலும் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. அவரை 23.06.2015 அன்று வார்டில் மறுமுறை சீராய்வு செய்தபோது மேலே கூறிய அனைத்து எக்ஸ்ரேகளும் எடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் எலும்பு முறிவு எதுவும் காணப்பபடவில்லை.

மேலும் சிடி ஸ்கனே் கழுத்து எலும்பில் எடுக்கப்பட்டிருந்தது. அதிலும் எலும்பு முறிவு காணப்படவில்லை. அவருக்கு கழுத்து எலும்பில் எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் நரம்பியல் சிகிச்சை நிபுணர் பரிந்துரையும் கோரப்பட்டது. பட்டியல் ஆவண எண் 52−ல் உள்ள பக்க எண் 2 மற்றும் 3 அ.த.சா.ஆ.49. சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்திலும் போலீஸ் விசாரணையிலும் ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக நோயாளி என்னிடம் வந்ததாக கூறியதற்கு எந்தவித குறிப்பும் என்னால் குறியிடப்பட்ட அ.த.சா.ஆ.49 ல் இல்லை.

ஆர்த்தோ டிபார்ட்மேண்டிற்கு மேல்சிகிச்சைக்காக ஆம்பூரிலிருந்து அனுப்பட்ட நகல் case sheet–ல் உள்ளதா என்றால் இல்லை. ஒரு மருத்துவமனையில் உள்ள உள் நோயாளி மற்றொரு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பும்போது 108 ஆம்புலன்ஸ் மற்றும் பணியாளர்களோடு அனுப்பிவைப்பார்கள். 108 ஆம்புலன்ஸில் நோயாளியை ஒரு மருத்துவமனையிலிருந்து மற்றோரு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கும்போது அந்த ஆம்புலன்ஸ் பதிவேட்டில் பதிவு செய்வார்கள்.

தனியார் வாகனத்தில் வரும்போது அவ்வாறு பதிவு செய்ய வாய்ப்பில்லை. நோயாளிகளை ஒரு துறையிலிருந்து மற்றோரு துறைக்கு ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே லேப்–க்கு அனுப்பும்போது தனியாக slip கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. case sheet–ல் குறிப்பு எழுதினால் போதும். உள்நோயாளியை ஒவ்வொரு துறைக்கும் சிகிச்சைக்கு அனுப்பும்போது ஒரு மருத்துவ பணியாளர் உடன் செல்வார்.

வார்டு பாய் அழைத்துச்செல்வதற்கான பதிவேடு இல்லை. ஒரு வார்டுக்கு ஒரு வார்டு பாய் தான் இருப்பார் அவர் அழைத்துச்செல்வார். Chief Doctor round வரும்போது அங்கு நோயாளி அங்கு இல்லை

என்றால் அதற்கான காரணத்தை செவிலியரிடமோ அல்லது வார்டு பாயிடமோ கேட்டு case sheet–ல் குறித்துவிட்டு செல்வார். நோயாளி மேல்சிகிச்சைக்க வரும்போது முன்னர் அவரை பரிசோதித்த மருத்துவர் கொடுத்த prescription– ஐ தற்போது மருத்துவம் பார்க்கும் மருத்துவர் அந்த நோயாளியை டயக்னோசிஸ் செய்து விட்டு மாத்திரை மருந்து கொடுப்பார் என்றால் சரிதான்.

தொடுகாயத்திற்கு ஆங்கிலத்தில் tenderness injury ஆகும். தொடுகாயத்தை contusion injury என்று சொல்லலாமா என்றால் அது வீக்கக்காயம் ஆகும். தொடுகாயம் எக்ஸ்ரே எடுக்கும்போது தெரிய வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை. சிடி ஸ்கேனிலும் தொடுகாயம் பிரதிபலிப்பதற்கான வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை.

Contusion injury ஆக இருந்தால் சிடி ஸ்கேனிலும் எக்ஸ்ரேவிலும் தெரிய வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. Bracial vein தோள்பட்டையின் உள்பக்கத்தில் வருமா என்றால் கையின் முன்பக்கவாட்டில் உள்ள தோள்பட்டையிலிருந்து வரும். அ.த.சா.ஆ.49 ல் பக்கம் 2–ல் Assault என்று எழுதி அடித்து அதன் கீழ் Multiple Injury என்று எழுதப்பட்டுள்ளது அது அடிக்கப்பட்டுள்ளதா என்றால் அடித்து எழுதியதுபோல் இல்லை ஆனால் மேலே எழுதப்பட்டுள்ளது.

அ.த.சா.ஆ.49 ல் Assault, Multiple Injury மற்றும் அதற்கு கீழே உள்ள ஒரு வாக்கியம் ஆகியவைகள் அடித்து எழுதப்பட்டுள்ளதா என்றால் அதை நான் எழுதவில்லை. அ.த.சா.ஆ.49 ல் பக்கம் 2 ல் நான் நோயாளியை எந்த நேரத்தில் பரிசோதித்தேன் என்று உள்ளதா

என்றால் இல்லை. மூன்றாவது பக்கத்தில் எழுதியுள்ளேன். அ.த.சா.ஆ.49 ல் 3 வது பக்கத்தில் உள்ள அனைத்து விவரங்களையும் நான் எழுதியது. 3 வது பக்கதை நான் எழுதியிருந்தால் அதில் உள்ள 2 வது பக்கத்தை நான் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். காரணம் நான் நோயாளியை பரிசோதனை செய்தபோது என்னுடைய மருத்துவ மாணவர் நான் சொல்ல சொல்ல 2 வது பக்கத்தில் உள்ளதை அவர் எழுதினார்.

நான் சொல்ல சொல்ல என்னுடைய மருத்துவ மாணவர் 2 வது பக்கத்தில் எழுதியதற்கு அந்த பக்கத்தில் ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும்போதும் நான் 2 வது பக்கத்தில் என்னுடைய மருத்துவ மாணவரை வைத்து எழுதிய விவகாரத்தை நான் கூறினேனா என்றால் அவர் கேட்கவில்லை நான் சொல்லவில்லை.

பட்டியல் ஆவண எண் 52 ல் நான் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் வைத்து பார்ப்பதற்கு முன்பு ஆம்பூர் மருத்துவமனையில் நோயாளியை பார்த்த மருத்துவரின் பெயர் உள்ளதா என்றால் இல்லை. இதற்கு முன்பு நோயாளியை diagnosis செய்த மருத்துவர் சொல்லிய காயங்கள் எனக்கு நினைவிருக்கிறதா என்றால் நினைவில்லை. Case sheet பார்த்தால்தான் சொல்லமுடியும். நான் case sheet பார்த்துதான் பரிசோதனை செய்தேன் என்றால் ஆமாம், ஆனால் தற்போது எனக்கு நினைவில்லை.

நான் தற்போது வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. Tenderness injury என்று நான்

கூறியதை இதற்கு முன்பு நோயாளிக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் குறிப்பிட்டாரா என்றால் அதை பார்த்திருந்தால் எழுதியிருப்பார் என்றால் சரிதான்.

Contusion என்ற காயங்கள் இரண்டு மூன்று நாட்களில் மறைய வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். தொடுகாயம் என்பது நாள் போக போக நிறம் மாறக்கூடியது என்றால் இல்லை. நோயாளிக்கு கழுத்திலும் முதுகிலும் காயம் இருந்ததாக 22.06.2015–ல் நான் சொன்னதுபோல் எந்த சிகிச்சையும் அளிக்கவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னை புலன் விசாரணை அதிகாரி எந்த தேதியில் விசாரணை செய்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2015–ல் விசாரணை செய்தார். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும்போது நான் Case sheet பாரத்துதான் சொன்னேன் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும்போது எந்த தேதியில் நான் சிகிச்சை அளித்தேன் என்றும் என்ன வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் நான் சொன்னேன்.

புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரிக்கும்போது அனைத்து கோப்புகளும் மருத்துவமனையில் இருந்தது என்றால் சரிதான். Case sheet–ல் எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே இருந்ததா என்றால் MRD–ல் இருக்கும். சிடி ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே–ல் உள்ளதை புலன் விசாரணை அதிகாரியிடம் விளக்கமாக கூறினேனா என்றால் சிகிச்சை case sheet–ல் உள்ளதை கூறினேன்.

எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ஆகியவை MRD–ல் உள்ளதாக புலன் விசாரணை அதிகாரியிடம் கூறினேனா என்றால் அவர் கேட்கவில்லை நான் கூறவில்லை. எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ஆகியவைகளில் தசைகளில் ஏற்படும் காயங்கள் பெரிதாக இருந்தால் தெரியுமா என்றால் அவ்வாறு தெரியாது.

எக்ஸ்ரேவில் தெரியும் என்றும் அது குறித்து பொய் சாட்சி கொடுக்கிறேன் என்றால் சரியல்ல. Case sheet, எக்ஸ்ரே மற்றும் சிடிஸ்கேன் ஆகியவைகளை நான் புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றாலும் அதை அவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எக்ஸ்ரேவும் சிஸ்கேனும் MRD ல் இருக்கும். சிபிசிஐடி போலீசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நான் மருத்துவமனை கல்லூரியின் உதவி பேராசிரியர். நான் கல்லூரியிலும் பணியாற்றுவேன். மருத்துவமனையிலும் பணியாற்றுவேன். கல்லூரிக்கும் மருத்துவமனைக்கும் தனித்தனியான வருகை பதிவேடு உள்ளதா என்றால் இல்லை. ஒரே பதிவேடுதான். வகுப்பில் பாடம் எடுக்கும்போது Theory class வந்துவிடுவோம்.

செய்முறைக்கு செல்லும்போது வார்டுக்கு வருவோம். செய்முறை சம்பந்தப்பட்ட வேலைகளை துறைத்தலைவர்தான் எங்களுக்கு ஒதுக்கீடு செய்வார். MBBS 1st year, 2nd year, 3rd year க்கு lab உள்ளது. இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு வார்டில் செயல்முறை கல்வி உள்ளது. வாட்டுக்கு நாங்கள் பணிக்கு வரும்போது அதற்கு தனியாக வாட்டு Attendance duty register பராமரிப்பார்களா என்றால் இல்லை. ஒரே Attendance register தான்.

நான் நோயாளிக்கு சிகிச்சை அளித்த 22.06.2015 அன்று 24 மணி நேர பணியில் இருந்தேன். 22.06.2015 அன்று காலை 08.00 மணி முதல் 23.06.2015 அன்று காலை 08.00 மணிவரை நான் பணிபுரிந்தேன். 23.06.2015 அன்று காலை 08.00 மணிமுதல் மதியம் 02.00 மணிவரை நான் பணிபுரிந்தேன். 22.06.2015 அன்று நான் பணி மருத்துவராக இருந்தேன். துறைத்தலைவர் என்னை பணி மருத்துவராக 22.06.2015 அன்று அமர்த்தினார்.

Duty roaster படி அன்று நான் பணியில் இருந்தேன். வருகை பதிவேடு என்பதும் Duty Roster Register என்பதும் வேறு. அவசர சிகிச்சை பிரிவில் Case sheet maintain செய்யப்படும் அதில் நான் எலும்பு முறிவு சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பேன். எலும்பு முறிவு என்றாலும் அது குறித்த சந்தேகம் இருந்தாலும் என்னை அழைப்பார்கள்.

அ.த.சா.ஆ.49 ல் 22.06.2015 மற்றும் 23.06.2015 ஆகிய இரு தேதிகளில் உள்ள நோயாளிகள் சம்பந்தப்பட்ட மருத்துவ விவரங்கள் மட்டுமே எனக்கு தெரியும். நேரம் குறித்த பதிவு case sheet ல்

வரவேண்டும் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.49 ல் நேரம் குறித்த பதிவு இல்லை என்றால் சரிதான். case sheet ல் நோயாளியின் பெயரானது பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 22.06.2015–க்கு முன்பாகவும் 23.06.2015–க்கு மதியம் 02.00 மணிக்கு பின்பும் நோயாளிக்கு நேரடியாக என்ன மருத்துவம் பார்த்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

என்னுடைய முதல் விசாரணையில் நான் கூறியதுபோல நோயாளி அவரை அடையாளம் தெரிந்த 6 நபர்கள் 19.06.2015 அன்று இரவு 08.00 மணியளவில் பள்ளிக்கொண்டாவில் தன்னை தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார் என்று சொல்லியதை நான் case sheet–ல் நான் பதிவு செய்யவில்லை என்றால் எனது பதிவேட்டில் நான் பதிவிடவில்லை. சிகிச்சைக்கு வந்த நபரை நேரடியாக நான் பரிசோதனை செய்தபோது வலது தோள்பட்டையிலும் வலது கையிலும் பலம் குறைந்திருந்ததை பரிசோதனை செய்து பரிசோதனை பதிவில் நான் பதிவிட்டேன். வலது கை பலம் குறைந்திருந்தது என்பது உண்ணா நோன்பு மற்றும் தைராய்டு சுரப்பி கோளாறு, அஜுரண கோளாறு ஆகிய காரணங்களால் osteoporosis ஏற்படுமா என்றால் இல்லை.

நான் பரிசோதனை செய்ததில் மேற்கூறிய காரணங்களினால் இல்லை. உடல் பலவீனமாக இருந்தாலும் கை பலம் குறைவாக இருக்கும் என்றால் இருக்காது. வைட்டமின் மற்றும் தாது உப்புக்கள் குறைபாடு காரணங்களால் கை பலம் குறைந்திருக்கும் என்றால் இல்லை. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

இல்லை. Joint inflamition ஆகியவற்றினால் கை பலம் குறைய வாய்ப்பு உள்ளதா என்றால் மிக குறைவான வாய்ப்பு உள்ளது. அ.த.சா.ஆ.49–ல் attested xerox என்று கையொப்பம் இட்டதில் நான் கையொப்பம் செய்யவில்லை வேறொரு மருத்துவர் கையொப்பம் செய்துள்ளார். அ.த.சா.ஆ.49 ல் என்னுடைய பெயரோ அதற்கான முத்திரையோ அந்த முத்திரையை ஒட்டி தேதியோ போடப்படவில்லை என்றால் சரிதான்.

Brachail plexus injury என்றால் கழுத்திலிருந்து வரும் நரம்புகள் தோள் பட்டைக்கு கீழே நரம்பு மண்டலமாக மாறி கைகளில் வருவதாகும். அ.த.சா.ஆ.49–ல் பக்கம் 2 ல் வலது பக்கம் மேல் மூலையில் உள்ள மூன்று குறிப்புகளை நான் எழுதவில்லை. அவ்வாறு அந்த பக்கத்தில் முகப்பின் மத்திய பகுதியில் உள்ள இரண்டு குறிப்புகளை நான் எழுதவில்லை. அதே பக்கத்தில் இடது மேல் பக்கத்திலுள்ள மூன்று குறிப்புகளையும் நான் எழுதவில்லை.

சிபிசிஐடி விசாரித்தபோது வலது தோள்பட்டை வலது கை கழுத்து எலும்பு நெஞ்சு பகுதியில் எக்ஸ்ரே எடுத்ததாக சொல்லியுள்ளேன். சிபிசிஐடி என்னை விசாரித்தபோது அந்த எக்ஸ்ரேவை போலீசாரிடம் கொடுக்கவில்லை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. சிடிஸ்கேன் போலீசாரிடம் கொடுக்கவில்லை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்களா என்று எனக்கு தெரியாது.

எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் நரம்பியல் மருத்துவரிடம் மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்தேன் அந்த விவரம் அ.த.சா.ஆ.49–ல் உள்ளது. 22.06.2015 அன்று எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் அறிக்கை சிபிசிஐடி போலீசாரிடம் நான் கொடுக்கவில்லை. அது நுண்கதிர்

நிபுணர் அந்த அறிக்கையை கொடுப்பார். அ.த.சா.ஆ.49 ல் முதல் பக்கத்தில் கடைசி இரண்டு வரிகள் மறைத்து வேறு வரிகள் அதில் ஒளிநகல் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.49 ல் 2 வது பக்கத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை பெயர் மற்றும் முத்திரை இல்லை என்றால் மேலே பெயர் இருக்கிறது அதற்கு கீழே எழுதியது எல்லாம் நான் சொல்ல சொல்ல என்னுடைய மாணவர் எழுதியது.

அ.த.சா.ஆ.49 ல் மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளது அது பழைய நடைமுறை தற்போது நடைமுறையில் இல்லை நான் தொடர்ச்சியாகத்தான் எழுதினேன். அதில் இரண்டாவது தாள் மூன்று பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை அது கூடுதலாக இணைக்கப்ட்ட தாள். case sheet ல் மூன்று பாகம் பிரிக்கப்பட்டிருக்குமா என்றால் பிரிக்கப்பட்டும் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். அ.த.சா.ஆ.49 ல் 2 வது பக்கத்தில் பின்னிட்டு ஒரு வெள்ளை தாளில் எழுதப்பட்டிருக்கிறது என்றால் நான் சொல்ல சொல்ல என்னுடைய மாணவர் எழுதியது.

22.06.2015 அன்று அது எழுதப்படவில்லை என்றும் பின்னிட்டு அது வழக்கிற்காக எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. ஏஆர் ல் உள்ள நபர் வேறு என்றும் நான் கொடுத்த case sheet ல் உள்ள நபர் வேறு என்றால் இல்லை. நான் பரிசோதிதனை செய்த நோயாளி வேறு போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லிய நோயாளியும் வேறு என்றால் இருவரும் ஒருவரேதான். நான் என்னுடைய முதல் விசாரணையில் நோயாளியை ஆம்பூரிலிருந்து வேலூருக்கு 108

ஆம்புலன்ஸ்ஸ் அழைத்து வந்ததாக போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை. நிதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது மருத்துவ குறிப்பின் அசல் ஆவணங்களை எடுத்துவர வேண்டும் என்றால் சரிதான். அரசு துறையின் கடிதம் உள்ளதாகவும் சொல்லி அந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டதாக சொல்லியுள்ளீர்கள் ஆனால் அதற்கு குறிப்பிட்டு அரசு ஆணை இருந்தால் மட்டுமே அழிக்க முடியுமே தவிர இல்லையென்றால் அழிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

சிபிசிஐடி என்னை விசாரிக்கும்போது நான் கூறாத விசயங்களை தற்போது நீதிமன்றத்தில் அதிகப்படுத்தி சொல்லி காயங்களை பற்றி தவறான தகவல்களை சொல்லியும் சிபிசிஐடி போலீஸ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யான சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. Medico Legal Evidence முறைப்படி என்னுடைய மேல் அதிகாரியிடமிருந்து உத்தரவு பெற்று அதற்கான எந்த ஆதாரங்களையும் சிபிசிஐடி போலீசாரிடம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் இரவு 08.20 மணி

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.29 20:45:00 +0530